பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 31உ (17—10—67) செவ்வாய் வெளியூர் : ஐப்பசி 1உ (18—10—67) புதன் [இதழ் : 103

தலைமை செயலகத்தில் ஒருமைப்பாடு நாள்

சென்னை, அக். 17—

அக்டோபர் 20-ந்தேதி நாடெங்கும் தேசிய ஒருமைப்பாடு நாள் கொண்டாடப்படுவதை யொட்டி, தமிழக அரசு தலைமைச் செயலக ஊழியர்கள், அன்று காலை 11-மணிக்கு கோட்டையில் இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் கூடி, தேசிய ஒருமைப்பாடு நாள் உறுதி மொழியை ஏற்பர்.

முதலமைச்சர் உறுதி மொழியைப் படிக்க—அதிகாரிகளும், அலுவலர்களும் அதைப் பின் மொழிவார்கள்.

விலைவாசி ஏற-பணவீக்கம் ஏற்பட-மத்திய அரசு நோட்டடிக்கும் கொடுமை!

மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான---நெருக்கடி நிலை

நடைபெறவிருக்கும் தேர்தல்களில் காங்கிரசார் கையாளவிருக்கும் உத்திக[ள்]---உபாயங்கள் : பொதுக் குழுவில் அறிஞர் [அண்]ணா விளக்கம்

பிரச்சினைகளில் உறுப்பினர்கள் [கா]ட்டிய ஆர்வம்---நிலைமை விளக்கம் --- நிகழ்ச்சிகள் முழு விவரம்

தமிழகம் ஆர்வத்தோடு கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த கழகப் பொதுக்குழு, 14—10—67 மாலை 5 மணிக்கு சென்னை—தியாகராய நகர் எஸ்.ஜி.எஸ். திருமண மண்டபத்தில் துவங்கிற்று.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கூடிய இரண்டாவது பொதுக்குழு ஆகும் இது.

கழக அவைத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை ஏற்று, வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

முதலில், தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன் அவர்கள், தஞ்சையில் நடைபெற்ற முந்திய பொதுக்குழுவின் நடவடிக்கைகளைப் படித்தார்; அதனைப் பொதுக்குழு ஏற்றுக் கொண்டது.

அடுத்து, அண்மையில் நடக்க இருக்கும் தேன் சென்னை இடைத்தேர்தல்—இன்னும் சில மாதங்களில் நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தல்கள்—அவற்றில் கழகத் தோழர்களின் பங்கு—பொறுப்பு பற்றிக் கருத்தறிவிக்குமாறு அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாவட்டச் செயலாளர்களை வேண்டினார்!

சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம், இராமநாதபுர மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி, தருமபுரி மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன், தென்னாற்காடு மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம், நெல்லை மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி, வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் இரா. தர்மலிங்கம், சேலம் மாவட்ட செயலாளர் ஈ.ஆர்.கிருஷ்ணன், கோவை மாவட்டச் சார்பில் புஞ்சை புளியமபட்டி தோழர் சாமிநாதன், மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, குமரி மாவட்டச் சார்பில் சு. வன்னிய பெருமாள், ஆந்திர மாநிலச் சார்பில் கே. ஜி. முருகேசன், கேரள மாநிலச் சார்பில் புருடோத்தமன், கருநாடக மாநிலச் சார்பில் கி. சோழன் ஆகியோர், தென் சென்னை இடைத் தேர்தல் — நகரமன்றத் தேர்தல்களில் தத்தம் நிலைபற்றி—பங்கு பற்றிக் கருத்தறிவித்தார்கள்.

தென் சென்னை இடைத் தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், முதல்நாள் பொதுக் குழுக் கூட்டத்தை இரவு 7-30 மணி அளவோடு முடித்தார்—அவைத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

மறுநாள் ஞாயிறு காலை 10-மணிக்கு பொதுக்குழுக் கூட்டம் துவங்கிற்று; அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்றார்.

முதலில், சட்ட திட்டத் திருத்தங்கள் பற்றிய விவாதத்தை அவைத் தலைவர் துவக்கிவைத்தார்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், தலைமைச் செயற்குழு செய்துள்ள சட்ட திட்டத் திருத்த சிபாரிசுகள் பற்றி விளக்கியும், சட்ட திட்டத் திருத்த நகலை, விதி—பிரிவுவாரியாகவும் படித்தார்.

திருத்த நகலின் ஒவ்வொரு விதி—பிரிவு வாரியாக விவாதித்து, குழு ஏற்றுக்கொண்டது.

பொதுக்குழு உறுப்பினர்கள் எழுப்பிய ஐயங்களை, அ[வைத் தலை]வர் இரா. நெடுஞ்[செழியன்] அமைப்புச் [செ]யலாளர் [என். வி.] நடராசன், பொருளாளர் [...] நிதி ஆகியோர் தெளிவித்[...]

அறிஞர் அண்ணா அ[வர்]கள், அவ்வப்போது உறுப்பினர்[களு]க்கு விளக்கமளித்துப் புத்தொ[ளி] பாய்ச்சினார்கள்.

அண்ணா அவர்கள் தெளிவுரை ஆற்றுகையில், சட்ட திட்டங்களைச் சரியாக வைத்துக்கொள்வதிலே உறுப்பினர்கள் காட்டும் அக்கறையைப் பாராட்டிவிட்டு, சட்ட திட்டம் தரமாக இருப்பதிலே மட்டுந்தான் கழகத்தின் சிறப்பு இருப்பதாக எண்ணிடக் கூடாது என்றும், சட்ட திட்டம் வழங்கும் உரிமைகள் கடமையைச் சிறப்பாகச் செய்வதாலே வருகின்றன என்றும் விளக்கினார்கள்.

திருச்சி மாநாட்டில் கழகம், சமூகத் துறையில் இருந்து அரசியலுக்கு மாறியதை நினைவூட்டினார்.

அரசியலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அளவுக்குத் தமக்கு ஒத்துழைப்பு நல்கிய பொது மக்களுக்கு நன்றி சொன்னார்.

ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு கழகம் பெற்றிருக்கிற புதிய சிறப்பினைச் சுட்டிக்காட்டி, கட்சி அமைப்பு வலிவுடன் இருந்தாக வேண்டிய தேவையை வற்புறுத்தி, அதை எப்படியெல்லாம் செய்திடலாம் என்று அண்ணா அவர்கள் விளக்கினார்கள்.

நாடு எவ்வளவு அமைதியாக இருந்தாலும், 'எங்கும் குழப்பம்—அராஜகம்' என்று புகார் கிளப்பி, கழக அரசைக் கவிழ்த்திடக் காங்கிரசு திட்டியிருக்கும் சூழ்ச்சித் திட்டத்தைப் பற்றி விளக்கி, காங்கிரசார் ஆத்திரமூட்டினாலும் கழகத் தோழர்கள் கொஞ்சம் ஆத்திரப்படாமல், 'காங்கிரசு அல்லாதவர்களும் ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடத்திட முடியும் என்று காட்டிட' உறுதுணையாக இருக்குமாறு வேண்டினார்கள்.

பிறகு சில தீர்மானங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பகல் 1-45 மணி அளவில் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் 3-15 மணிக்குப் பொதுக் குழுக் கூட்டம் மீண்டும் துவங்கியது.

விடுபட்டிருந்த சில சட்ட திட்டங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேறின.

உறுப்பினர் சேர்க்கும் பிரச்சினையில், புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் கடைசி நாளை 30—11—67 வரை பொதுச்செயலாளர் நீடித்திருப்பதாக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அறிவித்தார்.

கழக அமைப்புக்களின் தேர்தல் 1968 ஏப்ரல் தொடங்கி நடைபெறும் என்றும் அறி[வித்]தார்.

[...] அமைச்ச[...] விளக்கிப் பே[...] உறுப்பினர்களின் ஐயங்களைத் தெளிவிப்பர்' என்று அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அதற்கேற்ப, முதலில் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கல்வித் துறை பற்றிச் சொன்னார்; புதிய கல்லூரிகள்—தொழிற்பள்ளிகள்—தொழில் நுணுக்கப் பயிற்சி—ஆசிரியர் பயிற்சி பற்றி விளக்கி, பொதுக் குழு உறுப்பினர்களின் ஐயங்களையும் தெளிவித்தார்.

பின்னர் அவரே, தொழில் துறை பற்றியும் விளக்கினார்.

கல்வி பற்றிய விவாதத்தில் பொதுக் குழு உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் முனைப்பார்வத்தைப் பாராட்டிய அண்ணா அவர்கள், இந்த ஒரு துறையிலேயே இவ்வளவு நேரத்தை எடுத்துக்கொண்டதால், மற்ற அமைச்சர்கள் தத்தம் துறைகள் பற்றி விளக்கிட இயலாமை பற்றிச் சொன்னார்.

அடுத்து, தீர்மானங்கள் சில விவாதிக்கப்பட்டு நிறைவேறின.

கடைசியாக அண்ணா அவர்கள் பேசுகையில், 'இரண்டு நாட்கள்கூட—இப்போதைய நிலையில்—பொதுக் குழு நடத்தப் போதவில்லை' என்றும், '3 நாட்கள் தேவைப்படும்' என்றும் சொன்னார்.

'நம் சாதனைகள் நல்லவை என்பதாலேதான், அனைத்திந்திய நாளிதழ்களும்—அனைத்திந்தியத் தலைவர்களும் பாராட்டுகிறார்கள்' என்றார்.

கொள்முதல் விலை பற்றிச் சொல்லும்போது, நம்முடைய கொள்முதல் சமூக நீதியை நோக்கமாகக் கொண்டிருப்பதையும், பிற மாநிலங்களில் வணிக நோக்கம் கொண்டிருப்பதையும் விளக்கினார்.

ஒரு படி அரிசித் திட்டத்தால் ஏற்படும் அதிகச் செலவு ரூ. 17 கோடி—சர்க்கார் ஊழியர் கிராக்கிப் படி ரூ. 8 கோடி—வரவு செலவுத் திட்டத்தில் விழுந்த துண்டு ரூ. 5 கோடி—'சிறிய பாசனங்களுக்கு மத்திய அரசு உதவாது' என்ற நிலையில் ஏற்படும் புதிய செலவு ரூ. 10 கோடி—தனியாரிடமிருந்து மின்சார நிறுவனங்களை அரசு எடுத்துக் கொள்ளும் வகையில் கொடுக்கவேண்டிய இழப்பீடு ரூ. 3 கோடி—பஸ்களை எடுத்து நடத்தி, ரூ. 2 கோடி—என்ற இவ்வளவு இக்கட்டுகள் இடையே அரசு நெருக்குண்டு கிடக்கும் நிலையை விளக்கினார்.

"நம்முடைய முன்னேற்றம் படிப்படியான முன்னேற்றம்; ஆனால், நிலையான முன்னேற்றம்" என்றார்.

"ஆனால், நாம் இவ்வளவு அக்கறை கொண்டிருந்தும் விலைவாசி ஏறிடத்தக்க வகையிலும், பண வீக்கம் ஏற்படத்தக்க நிலையிலும் மத்திய அரசு நோட்டடித்துத் தள்ளும் கொடுமை"யைச் சுட்டிக் காட்டினார்.

நடைபெற இருக்கும் தென் சென்னை இடைத் தேர்தலில்—சங்ககிரி இடைத் தேர்தல்—நகராட்சித் தேர்தல்களில் காங்கிரசு கையாள இருக்கும் உத்தி உபாயங்களைச் சொல்லி கழகத் தோழர்கள் மெத்த கவனத்துடன் பணியாற்ற வேண்டிய தேவையை அறிவுறுத்தினார்.

பொதுக்குழுக் கூட்டத்தில் புதிய ஆர்வத்துடனும், அக்கறையுடனும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்தறிவித்தமைக்கு, 'பொதுச்செயலாளர்' என்றமுறையில் அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டதுடன் பொதுக்குழுக் கூட்டம் முடிவுற்றதாக அவைத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள், குழுக் கூட்டம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தந்த உறுப்பினர்களுக்கும், சென்னை மாவட்டக் கழக நிர்வாகிகள்—தோழர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

கல்லூரி மாணவ--மாணவிகள் வாய்க்கால் வெட்டினர்

வட சென்னைச் சீரணியின் ஆக்கப் பணி--அமைச்சர்கள் வருகை

சென்னை, அக். 17—

வியாசர்பாடி--கல்யாணபுரத்தில் சீரணியினர் மேற்கொண்டுள்ள வடிகால் வெட்டும் பணியில் இன்று பச்சையப்பன் பொறியியல் கல்லூரி மாணவர்களும், மேரி அரசி கல்லூரி மாணவிகளும் பங்கு கொண்டு வேலை செய்தனர்.

அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, முதலமைச்சரின் அணுக்கச் செயலாளர் திரு.சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ். ஆகியோர், மாணவ–மாணவியர் பணியாற்றுவதைப் பாராட்டி, சீரணித் தொண்டர்களை ஊக்குவித்தனர்.

நேற்று அமைச்சர் இரா.நெடுஞ்செழியன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., சி.வி. இராசகோபால் எம்.எல்.சி., மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் ஆகியோர் வந்திருந்து, மண்வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்களை ஊக்குவித்தனர்.

இராயல் என்பீல்டு தொழிலாளர்கள் 100 பேர் தங்கள் விடுமுறை நாளான நேற்று சீரணியினரோடு சேர்ந்துகொண்டு பணியாற்றினர்.

சீரணித் தொண்டர்கட்குப் பகலுணவும், மாலையில் தேநீரும் அளிக்கும் பொறுப்பை, பொறியர் கோபால், மற்றும் திருவாளர்கள் நாகபூஷணம், கோவிந்தன், கங்காதரன் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

இராயல் என்பீல்டு தொழிலாளர்கள் மட்டும் 200 அடி நீளக் கால்வாய் வெட்டினார்கள்.

திருவொற்றியூர் நகராட்சி உறுப்பினர் பி. ஆர். பழனிச்சாமி,

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. பொதுக் குழுத் தீர்மானங்கள்

அக். 14, 15 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது :—

இரங்கல்

(அ) முன்னாள் பிரிட்டிஷ் தலைமையமைச்சரும் தொழிற்கட்சித் தலைவரும், இந்தியாவுக்குச் சுதந்தரம் அளித்ததில் முன்நின்று ஆதரவு தந்தவருமான அட்லி அவர்களின் மறைவுக்கு இச்செயற்குழு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் இராம் மனோகர் லோகியா அவர்களின் மறைவுக்கு இச்செயற்குழு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(இ) சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் தோழர் நல்லமுத்து, சென்னை மாநகராட்சி முன்னாள் உறுப்பினரும் சென்னை மாவட்டக் கழக உறுப்பினருமான தோழர் சி. ஆர். பாலசுந்தரம், சென்னை மாவட்டக் கழக உறுப்பினர் வண்ணை கே. எஸ். அருணாசலம், காஞ்சி கழகத் தோழர் கோவிந்தனார் ஆகியோரின் மறைவுக்கு இப்பொதுக்குழு தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

தாழ்த்தப்பட்டோர்---பின்தங்கியோர் நலன்

தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அதிகப்படியான தொகையினை வழங்கியும், கல்விச் சலுகைக்கான வருமான வரம்பை உயர்த்தியும், தாழ்த்தப்பட்ட—பின்தங்கிய மக்களின் நலத்துக்கு வழிவகை செய்துள்ள தமிழக அரசை இப்பொதுக் குழு பாராட்டி, தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

—முன்: ஆர். கோமகன்; வழி: கோ. செங்குட்டுவன்

மகிழ்ச்சி --- பாராட்டு

தமிழக அரசு செயல்பட்டுவரும் முறையினை ஆய்ந்து பார்த்து—பொதுமக்களின் நன்மதிப்பையும் மனநிறைவையும், வெளி மாநிலத்துப் பெருந்தலைவர்களின் பாராட்டுதலையும் பெற்றிடத்தக்க முறையிலும், நலிந்தோரின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை நிறைவேற்றி வருவதன்மூலம் சமூக நீதியை வலுப்படுத்தி சமதர்மப் பாதையில் சென்று வருவதையும் கண்டு —இப்பொதுக்குழு தன் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்சிறது.

குறிப்பாக, உணவு உற்பத்திப் பெருக்கத்திலும், சீரான பங்கீட்டு முறையிலும், படி அரிசித் திட்டத்திலும் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முறையினையும், பெற்றுள்ள வெற்றியையும், தொழில் அமைப்புகளை இயன்ற அளவு நாட்டுடைமை ஆக்கி இருப்பதையும் இப்பொதுக்குழு வரவேற்கிறது.

—முன்மொழிந்தவர்: ப. உ. சண்முகம்
—வழிமொழிந்தவர்: நீலநாராயணன்

மாநில அரசுக்குக் கூடுதல் அதிகாரம்

தமிழக அரசின் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்தியும், மத்திய அரசிடம் அதிகாரம் குவிந்திருப்பதால், பல்வேறு துறைகளிலே தேவைப்படும் முன்னேற்றத்தைத் திட்டமிட்டபடி பெற்றிட இயலாத நிலை இருப்பதனை இப்பொதுக்குழு உணர்ந்து வருந்துவதுடன், இதே கருத்து வேறு பல மாநிலங்களிலும் இருந்துவருவதனை அறிந்து, 'இந்தக் குறை களையப்படத்தக்க முறையில் இந்திய அரசியல் சட்டம், நிபுணர் குழுவால் ஆராயப்பட்டுத் திருத்தப்பட வேண்டும்' என்று இப்பொதுக்குழு வலியுறுத்திக் கூறுகிறது.

—முன்: சி. பி. சிற்றரசு; வழி: கே. இராசாராம்

மொழிச் சிக்கலில் டில்லியின் போக்கு

மொழிப் பிரச்சினையில், நாளுக்குநாள் இந்தியப் பேரரசு குழப்பமும் கசப்பும், சிக்கலும் சங்கடமும் மூண்டிடத்தக்க முறையில் சொல்லாலும் செயலாலும் நடந்துவருவதனை இப்போதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

—முன்: எஸ். டி. சோமசுந்தரம்; வழி: கே. டி. எஸ். மணி

தமிழக அரசின் மொழிக் கொள்கை

மொழிப் பிரச்சினைக்குத் திட்டவட்டமான வழிமுறை கண்டிடத்தக்க முறையில் தமிழக அரசின் மொழிக் கொள்கை விளக்க அறிக்கை அமைந்திருப்பதை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

—முன்: க. அன்பழகன்; வழி: மன்னை ப. நாராயணசாமி

மாணவர்கட்குப் பாராட்டு

இந்தி ஆதிக்க முயற்சியை முறியடிக்கும் ஆர்வத்துடன் பணியாற்றி வரும் மாணவர் சமுதாயத்தை இப்பொதுக்குழு பாராட்டுவதுடன், மொழிப் பிரச்சினையில் தமிழர் நலனுக்கு உகந்த விதத்தில் தீர்வு காண—உறுதியுடன் பணியாற்றும் உணர்வும் ஆற்றலும் பெற்றுள்ள தி. மு. கழகம் அரசு நடத்திவருவதால்—'அரசு மூலமே தீர்வு காண வேண்டும்' என்றும், அரசுக்கு அதற்கேற்ற வலிவினைத் தேடித்தரும் முறையிலும் நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன், கிளர்ச்சிகள் – நேரடி நடவடிக்கைகள் ஆகிய வழிகளில் ஈடுபடாதிருந்து அரசுக்குத் துணைபுரிய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து மாணவர்கள் நடத்தத் திட்டமிட்டிருந்த பல்வேறு வகையான நேரடி நடவடிக்கைகளை நிறுத்திவிடும்படித் தமிழக முதலமைச்சர் கேட்டுக்கொண்ட வேண்டுகோளை மாணவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நன்றியையும், பாராட்டுதலையும் இப்பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

சு. ம. திருமணச் சட்டம்

சுயமரியாதைத் திருமணத்துக்கான சட்டம் கொண்டுவரப்படுவதை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

—முன்: கி. மனோகரன்; வழி: இரா. தர்மலிங்கம்

சிவசேனைக்குக் கண்டனம்

சிவசேனை போன்ற கேடுசெய்யும் அமைப்பின் மூலம் துயருற்றுள்ள தமிழ் மக்களுக்கு இப்பொதுக்குழு தன் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், பொறுப்புணர்ந்த பெரியோர்களும், இதழ்களும் தமது கண்டனத்தைத் தெரிவித்திருப்பதற்காக நன்றி கூறிக் கொள்வதுடன், மத்திய அரசு உடனடியாக மராட்டிய அரசுக்கு அறிவுறுத்தி, சிவசேனை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—முன்: எஸ். முத்து; வழி: இரா. சாம்பசிவம்

கழகத்தவர் கடமை

பதவி இழந்ததால் எரிச்சலுற்றுள்ள காங்கிரசுக் கட்சி, ஆபாசப் பிரசாரம் நடத்தியும்—பழிசுமத்தியும்—கலாம் விளைவிக்க விரும்புவதை உணர்ந்து, கழகம், பொறுமை—பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வதுடன், தரமான பிரசாரத்தின் மூலம் அரசுக்கு ஆதரவு திரட்டித்தரும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

—முன்: அன்பில் தர்மலிங்கம்; வழி: வன்னியபெருமாள்

தொழிலாளர்களிடை நல்லுறவு

உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோருடைய உரிமைகளைப் பெற்றளிக்கும் முறையில், தமிழக அரசு முக்கூட்டுக்[illegible] தரங்கம் நடத்தித் தீர்வு காண்பதை இப்போதுக்குழு [illegible] வரவேற்பதுடன், நேரடி நடவடிக்கையை மேற்கொ[illegible]லேயே தமிழக அரசிடம் கலந்து பேசி நீதி பெற்றிடும் மு[illegible]யை மேற்கொள்ளும்படி உழவர், தொழிலாளர் அமைப்புகளைக் கேட்டுக்கொள்வதுடன், கிளர்ச்சிகளை எழச்செய்தும்—பகை மூட்டியும்—கழகத்துக்கும் மற்ற கட்சிகளுக்கும் ம[illegible]ர்ந்துள்ள நேசப்பான்மையைக் கெடுத்து, தி. மு. கழகத்தை அரசுப் பொறுப்பிலிருந்து அகற்றிவிட காங்கிரசில் உள்ள ஆதிக்க உணர்வினர் முயற்சி செய்வதனை உணர்ந்து தோழமைக் கட்சிகள், அமைதியை நிலைநிறுத்தி—நீதி பெற்றிடும் முறையில் நடந்துகொண்டு தமிழக அரசின் கரத்தினை வலுப்படுத்த வேண்டுமென இப்போதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

—முன்: என். வி. நடராசன்; வழி: எம். எஸ். மணி

தீ விபத்துத் துயர் துடைப்பு

சென்னைத் தீ விபத்திலே சிக்கியோரின் புது வாழ்வுக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்குப் பேராதரவு தந்த அனைவருக்கும் இப்பொதுக்குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

முன்: எஸ். இரத்தினவேல் பாண்டியன்;
வழி: வி. எஸ். கோவிந்தராசன்

ஆதரவளிக்கும் இதழ்களுக்கு நன்றி

தமிழக அரசின் செயல் முறைகளை விளக்கி மகிழ்ச்சியும் பாராட்டுதலும் தெரிவித்தும், குறைகளைச் சுட்டிக்காட்டி நல்வழி கூறியும் சனநாயகத் தொண்டாற்றிவரும் இதழ்களுக்கு, இப்பொதுக்குழு மகிழ்ச்சி கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

—முன்: டி. கே. பொன்னுவேலு; வழி: அலமேலு அப்பாதுரை

தமிழக அரசுக்கு இடையூறு ஏன்?

அன்றாடத் தேவைப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் தமிழக அரசு முயற்சி செய்துவரும்போது, விலைவாசிகள் ஏறத்தக்க விதமான நடவடிக்கைகளில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட்டு நிலைமையை மோசமாக்கிக் கொண்டு வருவது கண்டு இப்போதுக்குழு வருந்துவதுடன், பொதுமக்கள் இந்த நிலையை உணர்ந்து மத்திய அரசின் போக்கை மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என இப்போதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

—முன்: சி. வி. எம். அண்ணாமலை; வழி: மு: இராமநாதன்

பர்மா அகதிகள்

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளோர் பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களுக்கான பணத்தைப் பெற்றுத் தரும் முயற்சியிலே மத்திய அரசு ஈடுபடாதிருப்பது கண்டு இப்பொதுக்குழு தன் வன்மையா[illegible]டனத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், தக்க முயற்சி[illegible]ண்டுமெ[illegible]வலியுறுத்துகிறது.

—முன்: [illegible] எஸ். [illegible]; வழி: மு. சண்முகம்

இலங்கைத் தமிழர்கட்கு மறு[illegible]ழ்வு

இலங்கையிலிருந்து தாயகம் அனுப்பப்ப[illegible] மக்களின் வாழ்வுக்காக, திட்டமிடுதல்—நிறைவேற்றுதல் ஆகி[illegible] பொறுப்பினைத் தமிழக அரசிடம் ஒப்படைத்து அதற்குத் தேவைப்படும் தொகையினைச் சுணங்காமல் தந்துதவும்படி மத்திய அரசை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

—முன்: பேராவூரணி அடைக்கலம்; வழி: ஆ. தங்கவேலு

நகராட்சித் தேர்தல்

சில திங்களில் நடைபெற இருக்கும் நகராட்சிமன்றத் தேர்தல்களில் கழகம் ஈடுபடுவதற்கான முறைகள்—கொள்ளவேண்டிய தொடர்புகள் ஆகியவற்றினை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசுக்காரர்கள்

கவனத்திற்கு:

'காஷ்மீருக்குக் குடியரசுத் தலைவர் ஆட்சி தேவையாம்

அமைதியின்மை-குழப்பநிலையை காட்டி மாற்றம் கோருகிறது ஜனசங்கம்

"சாதிக் தலைமையிலுள்ள காங்கிரசு அமைச்சரவையைக் கலைத்துவிட்டு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்படல் வேண்டும்"

என்ற கோரிக்கைகாக அக். 21-ந் தேதியினை, 'காஷ்மீர் தின'மாகக் கடைபிடிக்கப் போவதாக ஜனசங்கத் தலைவர் பால்ராஜ் மதோக், புதுடில்லியில் அறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான்—சீனா ஆகிய எதிரி நாடுகளுடன் ஒத்துப்போகும் தீய சக்திகளுக்கு ஆதரவும், அரவணைப்பும் காட்டப்படுவதாகக் குற்றஞ்சாட்டிய மதோக், 'சாதிக் அமைச்சரவையின் ஆட்சியில், காஷ்மீர்ப் பகுதிகளில் சட்ட ஒழுங்கின்மையும், குழப்பமின்மையுமே நிலவி வருகிறது' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இரத்தம் சிவப்புதான்!

கறுப்பு நிற மனிதன் ஒருவனின் சிறுநீர்ப் பை, மரணத் தருவாயிலிருந்த வெள்ளைக்காரப் பெண் ஒருத்தியின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது!

தென்னாப்பிரிக்காவிலுள்ள கேப்டவுன் என்ற நகரில், நீக்ரோ ஒருவன், சாலை விபத்து ஒன்றில் அடிபட்டு இறந்தான்; அவனது சிறுநீர்ப் பை, பிளாக் என்ற வெள்ளைக்கார மாதுக்கு உயிரைக் காப்பாற்றிய உறுப்பாக மாறியது!

"உதவி அளித்தது ஒரு நீக்ரோவின் உறுப்பு என்பது பற்றி நான் கவலைப்படவில்லை; உதவி கிடைத்ததைப் பற்றி நான் மகிழ்ச்சிகொள்கிறேன்" என்று அப்பெண்மணியின் கணவர் கூறியுள்ளார்.

தஞ்சை என். ஜி. ஓ.-க்கள் மகிழ்ச்சி---அண்ணாவுக்கு மாலையணிவிப்பு

தஞ்சைக்கு 11—10—67 அன்று வருகைதந்திருந்த தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை, தஞ்சை மாவட்ட என்.ஜி.ஓ. சங்கத் துணைத் தலைவர் கோ. வேதபுரி, மாவட்டச் செயலாளர் ச. பன்னீர்ச்செல்வம், தஞ்சை மாவட்ட வருவாய்த்துறை சங்கச் செயலாளர் கோ. நாராயணசாமி ஆகியோர் சந்தித்து, அண்மையில் என்.ஜி.ஓ.-க்களுக்கு முதலமைச்சர் ஊதிய உயர்வு அளித்தமைக்கு நன்றிகூறி—அவருக்கு மாலையணிவித்து — என்.ஜி.ஓ.-க்களின் சார்பாக மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அத்துடன், தஞ்சை மாவட்ட என்.ஜி.ஓ. சங்கத்தின் சார்பாக முதலமைச்சரின் தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ. 51-க்கான 'டிராப்ட்' முதலமைச்சரிடம் வழங்கப்பட்டது.

கமுதி ஊராட்சித் தலைவர் தேர்தல்

கமுதி ஊராட்சி ஒன்றிப்பைச் சேர்ந்த மறக்குளம் ஊராட்சித் தலைவர் தேர்தலில், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த கே. எல். எம். இராமமூர்த்தி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர், முன்பு, கமுதி பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சதிச் செயல்களுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க—

வீர இளைஞன் மாறனையும் டில்லிக்கு அனுப்புவோம்!

தென் சென்னை வாக்காளரிடை அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை--மயிலையில் 15—10—67 அன்று நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில், முரசொலி மாறனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இன்றியமையாமை குறித்து விளக்கியதாவது :—

"தம்பி மாறனுக்கு நல்ல பெயர் அமைந்துள்ளது; அதுமட்டுமல்ல; மாறன் என்றுமே கொள்கையில் மாருன்! கொள்கைப் பிடிப்புக் காரணமாக அவர், 'அண்ணா மெதுவாகச் செல்கிருர்' என்று (என் எதிரில் அல்ல) கடிந்துகொள்வார்! தனது வேகத்தைவிட மற்றவர்களின் வேகம் குறைவு—என்று எண்ணுவது வாலிபத்தின் கூறு! அத்தகைய வாலிபத் துடிப்பும், செய்திகளை அறிந்துகொள்வதிலுள்ள ஆர்வமும் கொண்டவர் மாறன்!

"'மாறன், நாடாளுமன்றத்துக்குப் போய் என்ன செய்யப்போகிருர்' என்று யாருமே கேட்கமாட்டார்கள்!

"காங்கிரசு வேட்பாளரைப் பற்றி, 'அவர் ஜெயித்து டில்லி சென்ருல், மந்திரியாகலாம்' என்று—அவருக்காகப் பேசுபவ[illegible]—கூறுவதாகக் கேள்வி!

"அப்படி மாறனுக்கு மந்திரி வேலை [illegible]ணுல், அங்கே அனுப்பவேண்டியுதில்லை; [illegible]இங்கே வேண்டுமானுலும் மந்திரிப் பதவி [illegible]ரலாம்; ஆனல், அத்தகைய மந்திரி வேலைக்காக மாறன் செல்லவில்லை!

"தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைக[illegible]க்கு டில்லியிலிருந்து குந்தகம் ஏற்படுமானுல், அங்கு நமக்காகத் தாக்குதல் தொடுக்க இந்த வீர இளைஞர் டில்லி செல்லவேண்டும்!

"முன்பு (1957-ல்), தேர்தலின்போது நாம், 'நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது' என்று சுவரொட்டி அச்சடித்து ஒட்டினேம்; அந்த வாசகத்திலுள்ள பொருளாதாரத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல், 'அண்ணாதுரை அடுக்கு மொழியில் எழுதியிருக்கிருன்; நாட்டு வாட்டம்—நோட்டு—என்று எத்தனை 'ட' போட்டிருக்கிருன்' என்றுதான் காங்கிரசுக்காரர்கள் பேசினுர்கள்!

"நோட்டுக்களை அச்சடித்துப் புழக்கத்தில் விட்டால் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்பதை, அவர்கள் ஆட்சி நிரூபித்தது! இப்போதுகூட, ரூ. 90 கோடிக்குக் காகிதப் பணத்தை அச்சடித்து விட்டிருக்கிறுர்கள்! இங்கிருந்து காங்கிரசு வேட்பாளர் சென்ருல், இதைக் தட்டிக் கேட்பாரா?

"மாறன் தட்டிக் கேட்பார்; 'என்னதான் அச்சு இயந்திரம் இருந்தாலும்—என்னதான் பளபளப்பான காகிதம் இருந்தாலும்—இப்படிப் பணத்தை அடித்துக் குவிக்கிறீர்களே! இதனுல் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுமே! விலை ஏறுமே! தமிழக அரசு விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கும்போது நீங்கள் இப்படிச் செய்யலாமா?' என்று கேட்பார்! தமிழக அரசின் நற்செயல்களை சீர்குலைக்கும் சதிச் செயல்கள் அங்கு நடந்தால், அதை முறியடிக்கும் பணியில் மாறன் ஈடுபடுவார்!

"மத்திய அரசின் செயல்களை முதலமைச்சராக இருக்கும் நான் கடுமையாகக் கண்டித்துப் பேசுவது அரசியல் நாகரிகமாகாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். அந்தக் காரியத்தை மாறன் போன்ற வீர இளைஞர்கள்தான் செய்யவேண்டும்!

"டில்லியில் தி.மு.கழகத்தைப் பற்றிக் காங்கிரசுத் தலைவர்கள், 'படிப்பறியாத—பொறுப்பில்லாதவர்கள்' என்று கூறிவந்திருக்கிருர்கள்! இப்போதுள்ள நமது உறுப்பினர்கள், தமது படிப்பாலும்—பண்பாலும்—பேச்சுத் திறனுலும்—நடவடிக்கையாலும், 'தி. மு. கழகம், படித்தவ[illegible] பாசறை; கல்வியறிவுள்ளோர் கூடாரம்' எ[illegible]று நிரூபித்துள்ளார்கள்! இன்னமும் அது மெய்ப்[illegible]பிக்கப்பட வேண்டுமானல, மாறன் போன்றவர்களை அங்கு அனுப்பவேண்டும்! 'இந்தியைத் திணிக்க இராணுவத்தை அனுப்பவேண்டும்' என்று கூறுபவர்கள் முன்பு, மாறன் போன்ற இளைஞர்களின் அணிவகுப்பை நிறுத்தவேண்டும்!

"படி அரிசித் திட்டத்தைக் கோண்டுவந்தோம்; இதனுல் முன்பு ரூ. 8 கோடி நஷ்டம் ஏற்பட்டது; இப்போது ரூ. 17 கோடி நஷ்டம் வரப்போகிறது; ஏனென்ருல், முன்பு இரண்டாந்தர அரிசியை அதிக விலை கொடுத்து வாங்கித் தந்ததால் ரூ. 8 கோடி நஷ்டம்; ஆனுல், இப்போது குறுவை அரிசியை வாங்க வேண்டும்; 'அது முதல்தர அரிசி' என்று அவர்கள் எழுதிவைத்துப் போய்விட்டார்கள்; அதனுல்தான், அதிக விலை கொடுத்து வாங்கி, ரூ. 17 கோடி நஷ்டத்தில் படி அரிசித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது; இருந்தாலும், நான் இன்னமும் அழுத்தமாக நம்பிக் கோண்டிருக்கிறேன் — 'உணவுப் பொருட்களின் விலையைக் குறைத்தால்தான் மற்ற பொருட்களின் விலை குறையும்' என்று நான் கற்ற பாடத்தை மறக்கவில்லை! என்ன கஷ்ட நஷ்டம் வந்தாலும், படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றுவோம்!

"'ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது நியாயம்' என்ருல், மாறனுக்கு ஓட்டு போடுங்கள்! 'படி அரிசி மூன்று ரூபாய்க்குத்தான் வேண்டும்; ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வேண்டாம்' என்ருல், இராமசாமிக்கு ஓட்டுப் போடுங்கள்!

"'படி அரிசித் திட்டம் நியாயமானது; தேவையானது' என்று நம்பினுல்—நஷ்டம் வந்தாலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் எங்களிடம் அக்கறை இருந்தால், தம்பி மாறனுக்கு ஓட்டுப் போடுங்கள்!

"முன்பு குடிசை தீப்பிடித்தால், 40 ரூபாய் தந்தார்கள்; நாம், 80 ரூபாய் என்று ஆக்கினேம்! 'அதுவும் போதாது' என்று, தீப்பிடிக்காத குடிசைகளைக் கட்டத் தீர்மானித்தோம்; அதற்கென்று ஒரு நிதி சேர்த்தோம்—முப்பது இலட்ச ரூபாய் நிதி சேர்த்தோம்!

"குடிசை வாழ்வோரின் அவதியை எடுத்துச் சொல்லி, கையேந்தி—மடியேந்தி, 30 இலட்ச ரூபாய் சேர்த்து, தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டியது நியாயம்தான் என்ருல், மாறனுக்கு வாக்களியுங்கள்!

"அப்படி நீங்கள் வாக்களிக்காவிட்டால், எனக்கே கூடச் சந்தேகம் வந்துவிடும்;—'ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது தவருே? குடிசைகளைச் சீர்திருத்துவது தவருே?' என்று என்னையே சந்தேகிக்கும்படி நடக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்!

"தமிழகத்தில் ஏராளமாகக் களர் நிலம்—பயிர் ஏற வேண்டிய நிலம் பாழ் வெளியாகக் கிடக்கிறது. திண்டிவனம் அருகில் 16 ஆயிரம் ஏக்கர் அவ்விதம் இருக்கிறது! அதையெல்லாம் சீர்திருத்த எனக்குப் பணம் வேண்டும்; என்னிடம் பணம் இல்லை; டில்லியிடம்தான் இருக்கிறது! 'அதைத் தட்டிக் கேட்கத்தான் மாறன் பாராளுமன்றம் செல்ல வேண்டும்' என்கிறேன்!

"காங்கிரசுக்காரர்கள் தேர்தல் நெருங்க நெருங்க ஆபாசமான முறையில் பேசுவார்கள்! மாறனைப் பற்றிக்கூடத் தாறுமாருகப் பேசலாம்! 'கலாம் விளையாதா' என்பதுதான் அவர்கள் நோக்கம்!

"அவர்கள் தாறுமாருகப் பேசுகிருர்கள் என்பதற்காக நாம் தாறுமாருகப் பேசக்கூடாது; ஏனெனில், நமது கழகம் கண்ணியத்தின்மீது கட்டப்பட்டது! தாறுமாருன பேச்சின மீது கட்டப்பட்டதல்ல!

"மரத்தை வெட்டுகிறவன்கூட, களைத்துப் போனுல் ஓய்வெடுப்பது இன்னொரு மரத்தின் நிழலில்தான! 'நம்மையும் இவன் வெட்டுவானே' என்று நினையாமல் அந்த மரம் கருணை நிழல் தருகிறது! 'அந்த மரத்துக்கு இருக்கும் புத்தி நமக்கு இருக்க[illegible]' என்று [illegible]க்கிறேன்; '[illegible]ட்டோம்' எ[illegible] அவர் க[illegible]டம்!

"நப[illegible] இரத்தத்தின் இரத்தமாய்—சதையின் சதை[illegible]ய் இருக்கும் பர்மாத் தமிழர்கள் இங்கு வந்த[illegible]கள்; அவர்கள் இருக்குமிடம் எது?—நாம் [illegible]நடக்கிற நடைபாதை! அவர்கள் என்ன கொண்டுவந்தார்கள்?—புரட்சிக் கவிஞர் கூறியதுபோல், கண்ணீரைத்தான் கொண்டுவந்தார்கள்! அவர்கள் விட்டுவந்தது என்ன?—தமது உடைமைகளை! அதைத் திருப்பிப் பெறும் பொறுப்பு யாரிடம் இருக்கிறது?—டில்லியிடம்! அங்கே தட்டிக்கேட்க வேண்டியவர்கள் - தட்டிக் கேட்கும் துணிவு படைத்தவர்கள் யார்? நவம்பர் ஏழாம் தேதி பதில் சொல்லுங்கள்!

"அதேபோன்று இலங்கைத் தீவில்—தேயிலைத் தோட்டத்தில் பாடுபட்டு, இலங்கையை மரகதத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கடல் கடந்த நாடுகளில்

தி.மு.க. பற்றிய அச்சம் ஏன்?

கடல்கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும்—தமிழகத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை விளக்கும் வகையில், 'நேபன்' செய்தி நிறுவனத்தின் சார்பில் திரு. டி. வெங்கடேசன் என்பார். ஆராய்ந்து எழுதியிருக்கும் கட்டுரை வருமாறு :—

பல தலைமுறைகளாக அயல்நாடுகளில் கடல்கடந்து வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள், தமிழகத்தைத் தமது பண்பாட்டின் ஊற்றுக் கண்ணாக இன்றும் கருதிவருகின்றனர்.

ஆனல், இது, 'தவருன இடத்தின் மீது வைக்கப்படும் பற்று' என்றும், 'நன்றி கெட்ட தன்மை' என்றும், அவர்கள் குடியேறிவிட்ட நாடுகளில் கருதப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆளுங்கட்சியாக எழுந்ததும், தமிழர்கள் குடியேறியுள்ள பல நாடுகளின் அரசுகள், தி. மு. கழகத்தை ஒளிவு மறைவின்றி மதிப்போர் அல்லது தமது நாடுகளுக்கு வரும் தி. மு. க. தலைவர்களைப் பாராட்டக் கூட்டங்களை நடத்துவோர் ஆகியோர்மீது ஐயப்பாடு கொண்டுள்ளன.

பிற நாடுகளைவிட இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தி. மு. க. மீது அயல்வாழ் தமிழர் காட்டும் ஆர்வம் துலக்கமாகத் தெரிகிறது.

"தமிழ்க் குடியேறிகள் இந்த ஆர்வத்தை மட்டுப்படுத்த வேண்டும்; இல்லையேல், நடவடிக்கை எடுக்கப்படும்" என்று இந்நாடுகளிலுள்ள ஆட்சியாளர் எச்சரித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், அண்டையிலுள்ள இலங்கையில் உடனே எதிரொலி எழுந்தது; 'திராவிட முன்னேற்றக் கழகத்தால் இலங்கைக்குப் பேராபத்து' என்று முன்னுள் தலைமையமைச்சர் திருமதி பண்டார நாயகா முழங்கினுர்.

ஆனல், 'கழகம், பிரிவினை மனப்போக்கைக் கைவிட்டுவிட்டது; மத்திய அரசுடன் மனமுவந்து இப்போது ஒத்துழைக்கிறது' என்று அண்மையில் இலங்கை சென்ற இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி இலங்கை மக்களுக்கு உறுதி கூறினுர்.

'தனது மக்களில் ஒரு சாரார் அயல் கட்சி ஒன்றுக்கு விசுவாசம் காட்டுவது அல்லது அதற்குப் பண உதவி செய்வது ஆகியவற்றைத் தனது அரசு பொருது' என்று—சிங்கப்பூர்த் திராவிட முன்னேற்றக் கழகப் பண்பாட்டுப் பிரிவின் நடவடிக்கைகளினுல்—அத்தீவின் அமைச்சர் எச்சரிக்க வேண்டி வந்தது.

"அயல்நாடுகளில் குடியேறிய தமிழர்களிடமிருந்து தி. மு. கழகம், பணத்தை எதிர்பார்க்கவில்லை; தி. மு. க. தலைவர்கள் தாம் சென்ற அயல் நாடுகளில் அரசியல் பிரசாரம் செய்யவில்லை" என்று தமிழகத்திலுள்ள தி. மு. கழகம் மறுமொழி கூறியது.

இன்று தமிழகத்தில் வாழும் தமிழரிடமிருந்து கண்ணேட்டம், பழக்கவழக்கம் ஆகியவற்றில் வேறுபட்ட அயல்நாடுவாழ் தமிழர், திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து தொடர்ந்து அகத்தூண்டுதல் பெற விரும்புவது ஏன்?—இதற்கு, அம்மக்களின் பண்பாட்டு வரலாற்றில் விடை காண வேண்டும்.

கிழக்கிந்தியக் கம்பெனி வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரும், பின்னர் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோதும், தமிழகம் அல்லது 'சோழ நாட்டிற்கு' மேற்கிலும், கிழக்கிலுமுள்ள பல நாடுகளுடன் வாணிபத் தொடர்பு இருந்தது. காலப்போக்கில் தமிழ் விற்பன்னர் பலர், தமிழ் இலக்கியச் செலவங்களை அயலுலகில் பரப்பினர்.

இசையிலும், இலக்கியத்திலும், பிற கலைகளிலும் ஆர்வலனுகவும் புரவலனுகவும் விளங்கிய முதலாம் இராசேந்திரன், அயல் நாடுகளுடன் பண்பாட்டு உறவை விரிக்க முயன்ருன்.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலில் இறங்கியதற்கு முன்னரே தமிழரின் இக்கடந்தகால வரலாற்றுப் பெருமையைத் தாயகத்திலும், வேற்று நாடுகளிலும் வாழ்கின்ற தமிழரின் உள்ளத்தில் பதியவைக்க முயன்றது.

டிரினிடாட், தென்னுப்பிரிக்கா, மொரிசியஸ், கிழக்காப்பிரிக்கா, பர்மா, பிரிட்டிஷ் வடபோர்னியோ, மலேயா போன்ற தொலைவிலிருந்த பல பிரிட்டிஷ் காலனிகளுக்குத் தாயகத்தை விட்டுக் கூலிகளாகச் சென்ற தமிழர்கள், தமது பண்பாட்டுப் பாரம்பரியத்தை விடாது காத்து வருகின்றனர். இவ்வாறு குடியேறியுள்ள சில பகுதிகளில் வாழும் தமிழர்கள், தாயகத்திலுள்ளவர்களைவிட மிகுந்த உறுதிப்பாட்டுடன் தமது பழக்கவழக்கங்களையும், பாரம்பரியத்தையும் கட்டிக்காத்து வருகின்றனர்.

இந்நாடுகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் செல்லும்போதெல்லாம் தமிழரின் பழம் பெருமையையும், நாகரிகச் சிறப்பையும் எடுத்துரைக்கின்றனர். அவர்கள் திருவள்ளுவரையும், பாரதியாரையும் அவரது நூல்களையும் போற்றுகின்றனர்.

மக்களின் எண்ணத்தைக் கவருவதைவிட உள்ளத்தைக் கவர்ந்தால்தான் இறுதி வெற்றி கிடைக்குமென்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த தலைவர்கள் உணர்ந்தனர்.

இந்தியா விடுதலை பெற்றதும், தமிழ் மக்களின் பண்பாட்டு உணர்வை உயிர்ப்பிக்கும் வேளை கனிந்தது! திராவிட முன்னேற்றக் கழகம், பழம் பெருமைக்குப் புத்துயிர் தர மக்களை ஆயத்தப்படுத்தியது! இச்சீர்திருத்தம் தாயகத்திலும், அயலிலும் வலுவான உருப் பெற்றது!

காங்கிரசு, தமிழகத்தில் பரந்த பொருளாதாரக் கடைக்காலைப் போடப் பாடுபட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம், சமூகக் கூட்டமைப்பின் குறைகளைச் சீர்திருத்த முயன்று, மக்களின் மனத்தை வென்றது!

நம்மைப் பற்றி நமக்குத் தெரியாதவை

இரஷ்யப் பேராசிரியர் கூறும் தகவல்

இந்திய வரலாற்றைப் பற்றி நமக்கெல்லாம் தெரியாத பல தகவல்களை, இரஷ்யர்கள் தெரிந்து வைத்திருக்கிருர்கள்!

தென்னகத்திலுள்ள கோல்கொண்டா, அகமத் நகர், பீஜப்பூர் இராச்சியங்களை, 16-வது நூற்ருண்டில் அரசாண்டவர்கள், ஸ்டாலின் பிறந்த ஜியார்ஜியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று கிருத்துவ அடிமைகளாம்!

குசராத்தைச் சேர்ந்த 'குஜ்ஜார்'களின் மூலப் பிறப்பிடம் ஜியார்ஜியாவாம்!

திராவிட மொழிகளுக்கும்—காக்கேஷிய மொழிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாம்!

பெங்களூரில் ஒரு பல்கலைக் கழகத் துணைவேந்தருடன் பேசும்பொழுது, ஓர் இரஷ்யப் பேராசிரியர் இப்படிக் கூறியிருக்கிருர்.

தி.மு.க. பொதுக்குழுத் தீர்மானங்கள்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வகுத்துக்கொள்ளும் பொறுப்பினை இப்பொதுக்குழு, பொதுச்செயலாளருக்கு அளிக்கிறது.

—தலைவர்

கழகத் தோழர்கட்கு வேண்டுகோள்

தமிழக அரசு மேற்கொண்டுள்ள உற்பத்திப் பெருக்கம்—கொள் முதல்—சிறு சேமிப்பு—சீரணி ஆகிய திட்டங்களுக்குக் கழகத் தோழர்கள் பேராதரவு திரட்டித் தந்திட முனைய வேண்டுமென இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது.

—தலைவர்

உள்ளாட்சிகளில் தாய்மார்கட்குச் சிறப்பிடம்

கழகத்தின் எல்லா அமைப்புகளிலும், ஊராட்சி—நகராட்சி போன்ற எல்லா ஆட்சிமன்றங்களிலும், இப்போது உள்ளதைவிட அதிக அளவு தாய்மார்கள் இடம் பெறச் செய்யும் திட்டத்தை மேற் கொள்வது என்று இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

—தலைவர்

பொய்ப் பிரசாரம் கண்ட தோல்வி

'சட்டம் கெட்டுவிட்டது; சமாதானம் குலைந்துவிட்டது' என்று பேசி காங்கிரசுத் தலைவர்கள், கழகத்தின்மீது பழி சுமத்தும் போக்கினை, 'பிற இடங்களின் நிலைமை எந்த அளவு சீர்கெட்டுவிட்டிருக்கிறது—இங்கு எந்த அளவு கலாம் குறைந்து அமளி அற்று அமைதி நிலவு கிறது என்பதனை ஆய்ந்தறிந்துள்ள பொறுப்புணர்ச்சியினர் பொருட் படுத்தவில்லை' என்பதை அறிந்து, பொதுக் குழு மகிழ்ச்சி அடை கிறது.

—முன் : ஈ. ஆர். கிருஷ்ணன் ; வழி : எச். எல். முருகேசன்

உணவுப் பொருள் ஒதுக்கீட்டில் மாறுதல் தேவை

கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை, பருப்பு வகை கள் ஆகிய உணவுப் பண்டங்களின் ஒதுக்கீட்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்குக் காட்டிவரும் போக்கில் மாறுதல் ஏற்பட வேண்டுமென வற்புறுத்துவதுடன், தமிழக அரசு கோரும் நியாய மான தேவையை ஒதுக்கீடு செய்யவேண்டுமென இப்போதுக் குழு வற்புறுத்துகிறது.

—முன் : எம். எஸ். சிவசாமி ; வழி : எஸ். ஏ. இராசமாணிக்கம்

திருக்குறள் பணிக்குப் பாராட்டு

தமிழக அரசுப் போக்குவரத்துப் பேருந்து வண்டிகளில் வள்ளுவர் உருவத்தையும், திருக்குறளையும் இடம்பெறச் செய்துள்ள தமிழக அரசினை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : என். வி. நடராசன் எம்.எல்.சி. ;
வழி : தில்லைவில்லாளன் எம்.ஏ.பி.எல்.

காவிரி நீர்த் திட்டம்

சென்னை நகரில் கூவம் சீர்திருத்தத்துக்கும், காவிரி நீரைக் குடிதண் ணீர்த் திட்டத்திற்கும் பயன்படுத்துவதற்கும் திட்டம் தீட்டிச் செயல் படுத்துகிற தமிழக அரசை, இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. ;
வழி : நீலநாராயணன்

இலவசக் கல்வி

புகுமுக வகுப்புக்களில், இலவசக் கல்வியை முதற் கட்டமாக அமுல் படுத்தியுள்ள தமிழக அரசை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : தில்லை வில்லாளன் எம்.ஏ.பி.எல். ;
வழி : ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

புன்செய்க்கு வரி விலக்கு

புன்செய் நிலங்களுக்கு வரி விலக்குச் செய்துள்ள தமிழக அரசினை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : புளியம்பட்டி சாமிநாதன் எம்.பி. ;
வழி : கோவை சே. அ. இராசமாணிக்கம் எம்.சி.

நபிகள் நாயகம் விழாவிற்கு விடுமுறை

தொழிலாளர்கள் மகிழத்தக்க விதத்தில்—மே தின விடுமுறையும் இஸ்லாமிய மக்கள் மகிழத்தக்க வகையில், நபிகள் நாயகம் விழா விடுமுறையும் வழங்கியுள்ள தமிழக அரசினை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : எம். எஸ். மணி எம்.எல்.ஏ. ; வழி : நெல்லை மஸ்தான்

கலைக்கப்பட்ட நகராட்சிகளுக்குப் புத்துயிர் அளிப்பு

காங்கிரசு ஆட்சியில் சனநாயகத்தை அழிக்கும் வகையிலும் எதேச் சாதிகாரமாகவும் கலைக்கப்பட்ட நெல்லை, அருப்புக்கோட்டை நகராட்சிகளை மீண்டும் இயங்கச் செய்த தமிழக அரசை இப் பொதுக்குழு பாராட்டுகிறது.

முன் : என். வி. நடராசன் எம்.எல்.சி. ;
வழி : எஸ். எஸ். தென்னரசு, ஜின்னு

நகர ஈட்டு--கிராக்கிப் படி

புதிய பொறுப்பேற்றுக்கொண்ட தமிழக அரசு, பொருளாதாரச் சூழ்நிலையில் பல வகையில் பாதிக்கப்பட்டாலும் அரசாங்க ஊழி யர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்தியதோடு அல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த அரசும் கொடுக்காத அளவிற்கு சென்னையில் உள்ள அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி பத்து சதவிகிதம் உயர்த்தியுள்ளதை இப்பொதுக் குழு பாராட்டுகிறது.

முன் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.;
வழி : நெல்லை மஸ்தான்

பேருந்துக் கட்டணக் குறைப்பு

தமிழக அரசுப் போக்குவரத்து பேருந்து வண்டிகளில் கட்டணத் தைக் குறைத்தும், வழித் தடங்களை அதிகப்படுத்தியும் பொதுமக் கள் நனமையடையுமாறு செய்துவருகிற தமிழக அரசினை இப் பொதுக் குழு பாராட்டுகிறது.

முன் : கே. எம். கண்ணபிரான் ;
வழி : பொன்னேரி மு. கேசவன்: கோ. இளவரசு எம்.சி.

விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்றி

உணவுத் தானியத் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தமிழக அரசு விடுத்த வேண்டுகோளின்படி, 'ஆடுதுறை—27' நெல் சாகு படி செய்த நிலச் சொந்தக்காரர்களுக்கும், ஒத்துழைத்த விவசாய தொழிலாளர்களுக்கும் இப்பொதுக் குழு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

தஞ்சை விவசாயிகளுக்குப் பாராட்டு

ஒருபோக நிலத்தை இருபோகமாக ஆக்கி உற்பத்தியை அதிகரித் துத் தந்த தமிழக விவசாயப் பெருமக்களை—குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயப் பெருமக்களை இப்பொதுக் குழு பாராட்டுகிறது.

முன் : அன்பில் தர்மலிங்கம் ; வழி : இரா. தர்மலிங்கம்

'தமிழ் நாடு' பெயர்

நீண்ட நாட்களாகத் தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்துவந்த—நமது மாநிலத்திற்கு, 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டும் தீர்மானத் தைத் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி மத்திய அரசுக் [illegible] பரிந்துரை செய்திருப்பதோடு, அனைத்தையும் தமிழ் மயமா[illegible] முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தமிழக அரசினை இப்பொ[illegible] குழு பாராட்டுகிறது.

—முன் : மன்னை ப. நாராயண[illegible]மி
வழி : பொன். சொக்கலிங்[illegible]ம்

ஆசிரியர்கட்கு நியாயமான ஊதியம்

தமிழகத்தில் ஹையர் கிரேடு ஊதியம் பெற்றுவந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 5,000 பேருக்கு, செகண்டரி கிரேடு சம்பளம் கொடுத்து வாழ்வளித்த தமிழக அரசை இப்பொதுக்குழு பாராட்டு கிறது.

—முன் : எஸ். எஸ். தென்னரசு
வழி : உ. பில்லப்பன் எம்.ஏ.பி.எல்.

தூத்துக்குடித் திட்டம்

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், 'மீன்பிடித் துறைமுகம்' என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுவிடும் என்ற அளவுக்கு மத்திய அரசின் நிபுணர் அறிக்கை தெரிவித்த காரணத்தால், அத்திட்டம் கைவிடப் பட்டுவிடும் அபாயமேற்பட்டபோது ஆர்த்தெழுந்து எழுச்சி நாள் நடத்திய பொதுமக்களை இப்பொதுக்குழு பாராட்டுவதுடன், மத்திய அரசிடம் வாதாடி, 'தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தை நிறை வேற்றியே தீருவது' என்ற உறுதியை மத்திய அரசு அறிவிக்கும்படி செய்த தமிழக அரசையும் இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

—முன் : எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ.
வழி : இரத்தினவேல் பாண்டியன்

இரசாயன உர விலை

தமிழகத்திற்குத் தேவையான இரசாயன உரத்தில் பாதி அளவுதான் மத்திய அரசு கொடுத்து வருகிறது ; அதிலும் குறிப்பாக, அமோக விளைச்சல்தரும் 'ஆடுதுறை-27' நெல்லுக்கு மட்டும் தேவையான அளவு உத்தரவாதத்துடன் கொடுத்து வருகிறது.

மேலும், 'கோயம்புத்தூர்-29' உயர் ரக நெல்லையும் மத்திய அரசு உர விநியோகத்திற்கு அங்கீகரிக்க வேண்டுமென்று இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது.

ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்ட காரணத்தால் இரசாயன உரத்தின் விலை ஒரு டன்னுக்கு ரூபாய் நூறு உயர்ந்திருப்பதால், விவசாயிகளின் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதைச் சரிக்கட்ட வேண்டுமென்றும், அதனை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்றும் இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

—முன் : பொன். சொக்கலிங்கம்
வழி : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.

தாழ்த்தப்பட்டோர்--பிற்பட்டோர் சலுகை மறுப்பு

தாழ்த்தப்பட்டவர்—பின்தங்கிய வகுப்பினர்களுக்கு இந்திய அரசியல் சட்டத்தின்படி அளிக்கப்பட்டுவந்த சமூக உயர்வுச் சலுகைகளைத் தடுத்து நிறுத்தும் வகையில், தனி உரிமைகளெனக் கருதப்படு வதைக் குறித்து இப்பொதுக்குழு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள் வதோடு, மத்திய அரசு, இந்திய அரசியல் சட்டத்தின்படி அவ்விதி யைத் தெளிவுபடுத்தி உறுதியளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக் கக் கேட்டுக் [illegible]ள்ளப்படுகிறது.

[illegible] ஆறுமுகம்

சட்ட தி[illegible]குப் பாரா[illegible]

கழகப் பொதுச்செயலாளர் நியமித்த சட[illegible]ட்டத் திருத்தக் குழு, செம்மையான வகையில் கழகச் சட்ட[illegible]ட்டங்களைத் திருத்திப் பொதுக்குழுவின் முன்வைத்தமைக்கு இ[illegible]ாதுக்குழு தன் பாராட்டு தலையும் நன்றியையும் தெரிவித்துக் கொ[illegible]கிறது.

—முன் : எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ., எம்.சி.
வழி : கே. எம். கண்ணபிரான்

சதிச்செயல்களுக்கு .....

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திவு ஆக்கினார்கள் இலங்கைத் தமிழர்கள்! அவர் கள் இலட்சக்கணக்கில் இங்கு வந்திறங்கப் போகி ருர்கள்! அவர்கள் நல்வாழ்விற்கு என்ன செய் யப்போகிருேம்? அதற்குரிய பணத்தை எங்கு கேட்டுப் பெறப்போகிருேம்?—டில்லியிடம்தான்! அதைக் கேட்கத்தான் மாறனை அனுப்புகிருேம்!

" மொழிப் பிரச்சினையில் 'தமிழும் ஆங்கிலமும் போதும்' என்று இங்கே கூறிவிடலாம்; ஆனால், டில்லியிலிருந்து வரும் இந்தி வெள்ளத்திற்கு அணை போடத்தான் மாறனை அனுப்புகிருேம்!

" ஆறு மாதத்திற்குமுன் நான் கொடுத்த குர லுக்கு ஆதரவும் மதிப்பும் தந்தீர்கள்! இப்போ தும் அந்தக் குரலுக்கு இருக்கும் மதிப்பை மாற்ற மாட்டீர்கள் என்று நம்புகிறேன்; அப்படித் தவ ருன காரியம் ஏதும் நாங்கள் செய்துவிடவில்லை; உங்கள் நன்மைக்காகக் காரியமாற்றினேம்! அத் தகைய காரியங்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் முறையில் நீங்கள் மாறனை ஆதரிக்க வேண்டும்."

இன்று சென்னை 75-வது வட் டம் திருவல்லிக்கேணியில் நடைபெறும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில்,

அறிஞர் அண்ணு

அவர்களும் கலந்துகொள்கிருர்

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர்கள் எண் ணிக்கை, கடந்த பொதுத் தேர் தலைவிட இப்போது 8,706 உயர்ந் துள்ளது. கடந்தபொதுத்தேர்தலின் போது வாக்காளர்கள் எண் ணிக்கை 5,75,015; இப்போது 5,83,721

அமைச்சர்

மு. கருணநிதி

அறிவிப்பு

" விபத்துக்காளாகி இன்னும் சிகிச்சை பெற்றவண்ணம் வீட்டில் ஒய்வு பெற்றுவரும் நான், 'தொடர்ந்து மேலும் இரண்டு வாரங்களுக்கு கூட் டங்களில் கலந்துகொள்வதோ பார்வையாளர்களை சந்திப் பதோ கூடாது' என்று டாக் டர்களால் கண்டிப்பாக எச்ச ரிக்கப்பட்டிருக்கிறேன்.

" ஆகவே, என் உடல் நலம் கருதி தயவுசெய்து இரண்டு வார முழுமையான ஓய்வினைப் பொதுமக்களும் பொறுப்புள்ள நண்பர்களும் அளிக்கவேண்டு கிறேன்.

" டாக்டர் அனுமதி பெற்ற பிறகு கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலும்"

என்று அமைச்சர் மு. கருணநிதி அறிவிக்கிருர்.

மதுரை முத்து

ஊர் திரும்பினுர்

சென்னை, அக். 16—

அமைச்சர் மு. கருணநிதியுடன் கார் விபத்துக்குள்ளாகித் தலைமை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ்.முத்து எம்.எல்.சி. அவர்கள், உடல்நலம் பெற்று மதுரை புறப்பட்டுச் சென்ருர்.

மருத்துவமனையிலிருந்து பிற்பகல் 3-மணிக்கு வெளிவந்த முத்து அவர்கள், அவருடன் விபத்துக் குள்ளான காரோட்டி பாண்டி யைச் சந்தித்து ஆறுதல் கூறினுர்.

பின் அறிஞர் அண்ணு அவர் களையும், அமைச்சர் மு. கருணநிதி அவர்களையும் சந்தித்துப் பேசி விட்டு, தமது குடும்பத்துடன் இரவு இரயிலில் மதுரைக்குப் புறப்பட் டார்.

கல்லூரி மாணவ-மாணவிகள்..

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி. ஆகி யோரும் கலந்துகொண்டு பணி யாற்றினர்.

வட சென்னைச் சீரணிச் செயலா ளர் சு. பாலன் எம்.சி., பெரம்பூர் தொகுதி சீரணித் தலைவர் டில்லி ராஜ், பூங்கா நகர்த் தலைவர் மணி வண்ணன், பேசின்பிரிட்ஜ் தலைவர் எத்திராஜ் ஆகியோரும், வட்ட மாநகராட்சி உறுப்பினர் அன்பிற் கரசன் ஆகியோரும் உடனிருந்து பணியாற்றி வருகின்றனர்.

நடக்க இருப்பவை

18--10--67

சென்னை 31-வது வட்டம்

சென்னை 31.வது வட்டம் வீராங்கனை வள்ளியம்மை பகுத் தறிவு மன்ற 10-வது ஆண்டு விழா' இரவு 7-மணிக்கு பெரம் பூர் படேல் சாலையில்; தலைவர் : மு. பாலகிருட்டினன்; பேசு வோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வே. தணிகாசலம் எம்.சி., முகைதீன்பாட்சா பி.ஏ., ஜீவா கலைமணி பி.ஏ., ம. ரா. சீனிவாசன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவ ராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாரா யண செட்டித் தெரு, சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்[illegible]